BRAMPTON Service and Information Update

# ப்ராம்ப்ட்டன் நகரில் குடும்ப தினம் 2020

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 11, 2020) – குடும்ப தினம் என்பது, நமது சமுதாயத்தில் குடும்பத்தினரின் முக்கியத்துவம் பற்றிய ஒரு அங்கீகாரம் அளிக்கும் நாளாகும். இந்நாளில் நமது வசிப்பிட வாசிகள் தங்கள் அன்பிற்கினிவர்களுடன் மட்டுமே அந்நாள் முழுவதையும் கழிக்க உற்சாகம் கொடுக்கப்படுகிறார்கள்!

இந்த வருடத்தில், இந்தக் குடும்ப தினமானது, பிப்ரவரி 17, திங்கட்கிழமையன்று வருகிறது; இதன் விளைவாக பல பொது மக்கள் சேவைகள் கிடைக்க மாட்டாது, அல்லது வழங்கப்படும் சேவையின் அளவுகள் குறைவாகவே இருக்கும்.

இந்தக் குடும்ப தினத்தில், ப்ராம்ட்டன் சிட்டி ஹால் மூடப்பட்டிருக்கும். வசிப்பிட வாசிகள் நேரில் வந்து திருமண உரிமங்களுக்கு விண்ணப்பம் செய்யவோ, திருமண நிகழ்ச்சிகளுக்கு முன்பதிவு செய்யவோ, வாகன நிறுத்த அபராதம் செலுத்தவோ, வாகனம் மற்றும் தொழில் உரிமங்களுக்கு புதிதாக விண்ணப்பிக்கவோ அல்லது புதுப்பிக்கவோ இயலாது.

தீத்தடுப்பு மற்றும் அவசரகால சேவைகள், ப்ராம்ப்ட்டன் உப சட்ட அமலாக்கம் மற்றும் விலங்குகள் கட்டுப்பாட்டு அமைப்புக்கள் உள்ளிட்ட பலவித சேவைகள் தொடர்ந்து எப்போதும் போல தொடரும்.

விசாரணைகள் ஏதுமிருந்தால், 311 அல்லது 905.874.2000 (ப்ராம்ப்ட்டன் நகருக்கு வெளியிலாக) என்ற எண்ணிற்கு வசிப்பிடவாசிகள் அழைக்கலாம், அல்லது ப்ராம்ப்ட்டன் 311 [(Brampton 311 app) (ஆப் ஸ்டோர்{App Store} அல்லது கூகில் ப்ளே { or Google Play})] என்னும் செயலியை உபயோகிக்கலாம் அல்லது 311@brampton.ca எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். வாகன நிறுத்தம், குப்பை சேகரித்தல், கேளிக்கை நிகழ்ச்சிகள் இன்னும் பல விஷயங்கள் உள்ளிட்ட ப்ராம்ப்ட்டன் நகர் அல்லது ரீஜன் ஆஃப் பீல் விஷயங்களுக்கு 24/7 எனும் அடிப்படையில் நாங்கள் தயாராக இருக்கிறோம்..

**ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து துறை**

ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து துறையானது ஞாயிற்றுக்கிழமை/விடுமுறை நாள் சேவையை குடும்ப தினத்தன்று வழங்கும்.

வழித்தடம் மற்றும் கால அட்டவணைகளுக்கு, அழைக்கவும் 905.874.2999 அல்லது www.bramptontransit.com. க்கு வருகை தரவும். நிகழ்நேரத்தில் அடுத்து வரவிருக்கும் பேருந்து பற்றிய தகவல்களுக்கு உங்கள் ஸ்மார்ட்ஃபோன் அல்லது வேறு எந்த மொபைல் தொலைபேசியிலும் இங்கு செல்லவும்: nextride.brampton.ca . வேறு பயணத்திட்ட தகவல்களுக்கு, செல்லவும் :www.triplinx.ca அல்லது Google Maps செல்லவும்.

**ப்ராம்ப்ட்டன் மனமகிழ்கேளிக்கை**

பல தரப்பட்ட வேடிக்கை, குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் செயல்பாடுகள் ஆகியவற்றைக் கண்டு மகிழ, உங்களுடைய அருகாமையிலிருக்கும் சமுதாயக் கூடத்தில் எங்களுடன்

இணையவும்  செயல்பாடுகளின் நேர அட்டவணை பற்றிய முழு தகவல்களுக்கு www.brampton.ca/recreation. எனும் இணைய தளத்தில் பார்வையிடவும்.

**ப்ராம்ப்ட்டன் விலங்கு நல சேவைகள்**

ப்ராம்ப்ட்டன் விலங்குகள் நல காப்பகமானது குடும்பதினத்தன்று மூடப்பட்டிருக்கும். ஏதேனும் தகவல்களுக்கு, அழைக்கவும் 905.458.5800 அல்லது 311,  வருகை புரியவும்: www.brampton.ca/animalservices.

**ப்ராம்ப்ட்டன் நூலகம்**

ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து நூலகக் கிளைகளும் குடும்ப தினத்தன்று மூடப்பட்டிருக்கும். உங்கள் குடும்ப தினத்தின் ஒரு அங்கமாக திரைப்படங்கள் பாருங்கள், இசை கேளுங்கள் அல்லது இ-புத்தகம் படியுங்கள்! எங்கள் டிஜிட்டல் பொருட்கள் பற்றிய தகவல்கள், நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகளுக்கு  வருகை புரியவும்: www.bramptonlibrary.ca அல்லது அழைக்கவும் 905.793.4636.

-30-

**ஊடகத் தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம்&சமூக ஈடுபாடு
ஸ்ட்ராட்டெஜிக் கம்யூனிகேஷன்
ப்ராம்ப்ட்டன் மாநகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca